සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

පළමු වාර ඇගයීම
முதலாம் தவணை மதிப்பீடு - 2018
First Term Evaluation

| ශ්‍රේණිය / தரம் / Grade | 10 | විෂයය / பாடம் / Subject | தமிழ்மொழியும் இலக்கியமும் | පත්‍රය / வினாத்தாள் / Paper | I | පැය / மணித்தியாலம் / Hours | 1 |
|---|---|---|---|---|---|---|---|

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் 1 இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.**
- **1 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றினதும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **தடித்த எழுத்திலமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

(1) வண்டோ**கானத்தி**டையிருந்து வந்து கமல மதுவுண்ணும்.' - கானம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்

1.குளம் 2. தாமரை 3.காடு 4.தேன்

(2) பொங்கி எழுந்த **கொழுங்கனலெ**ன்ன எழுந்தார்' இங்கு வந்துள்ள கொழுங்கனல் என்பதன் பொருள்

1. நீண்ட அருவி 2. பெருநெருப்பு 3. நீர் வீழ்ச்சி 4. மிக்க கோபம்

(3) நாய் அனையார் **கேண்மை** தழீஇக் கொளல் வேண்டும்' இங்கு கேண்மை என்பதன் எதிர்க்கருத்துச்சொல்

1. நட்பு 2. வேற்றுமை 3. பகைமை 4. நன்றி

(4) நாட்டார் பாடல்கள் **பாமர** மக்களால் பாடப்பட்டவை. இங்கு பாமரர் என்பதன் எதிர்ப் பொருள்

1. பண்டிதர் 2. கிராமிய மக்கள் 3. பட்டணத்தார் 4. முன்னோர்

(5) **பாணன்** அரசனைப் புகழ்ந்து பாடினான். பாணன் என்பதன் எதிர்ப்பாற் சொல்

1. பாடகி 2. விறலி 3. பாணி 4. பாடகன்

➢ **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

(6) பிள்ளை என்ற இளமைப் பெயர் பின்வருவனவற்றுள் எதனுடன் பொருந்தி வராது

1. கிளி 2. மயில் 3. அணில் 4. கீரி

(7) பின்வருவனவற்றுள் மலையகப் பிரதேச வழக்குச் சொல்

1. பசுந்து 2. மனே 3. கிழிஞ்ச 4. காடி

(8)கடலும் கடல் சார்ந்த இடத்தையும் குறிப்பது

1. மருதம் 2. நெய்தல் 3. குறிஞ்சி 4. முல்லை

(9) தென்னையின் கூட்டம் "தோப்பு" என்பது போல் புத்தகத்தின் கூட்டம்

1. அடுக்கு 2. மாலை 3. குவியல் 4. கும்பல்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

(10) சேரலாதன் படங்களைச் சீடியில் (Compact disk) பதிவு செய்தான். Compact diskஎன்பதற்குப் பொருத்தமான தமிழ்ச் சொல்

1. நெகிழ்தட்டு 2. கோவை 3. இறுவட்டு 4. மென்தட்டு

(11)அறுபதாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா

1. அமுத விழா 2. பவள விழா 3. வெள்ளி விழா 4. மணி விழா

(12) ஒரு காரியம் எளிதில் நிறைவேறுவதைக் குறிக்கும் தொடர்

1. வழிமேல் விழி வைத்து 2. தேடிய பூண்டு காலில் சிக்கியது போல
3. வெள்ளிடை மலை போல 4. ஊன் உறக்கம் இல்லாது

(13)பின்வருவனவற்றுள் அடுக்குத் தொடராக அமைவது

1. சல சல 2. பாம்பு பாம்பு 3. பச்சைப் பசேல் 4. மூலைமுடுக்கு

(14)இணங்கிக்கேட்டல் என்ற பொருளைத்தரும் மரபுத்தொடர்

1. செவியறிவுறுத்தல் 2. செவிசாய்த்தல் 3. செவிப்படுதல் 4. செவிமடுத்தல்

(15)பின்வருவனவற்றுள் இருபாற் பொதுப்பெயர் அல்லாதது

1. குழந்தை 2. நீதிபதி 3. தாதி 4. மேதை

(16)எதிர்ப்பொருளைக் குறிக்கும் இரு சொற்கள் இணைந்த இணைமொழியல்லாதது

1. இன்னார் இனியார் 2. வாடிவதங்கி 3. இன்பதுன்பம் 4. ஏற்ற இறக்கம்

(17) முதலாம்தர மாணவர்களை பாடசாலையில் அனுமதிக்கும் ஆரம்ப நிகழ்வு

1. கால்கோள் விழா 2. ஏடுதொடக்குதல் 3. வித்தியாரம்பம் 4. அரங்கேற்றம்

(18) எமக்கு உதவி செய்தவர்களுக்கு ஒருபோதும் துரோகம் செய்யக்கூடாது என்னும் பொருளைத்தரும் பழமொழி

1. ஊரோடு ஒத்து வாழ் 2. உப்பிட்டவரை உள்ளளவும் நினை
3. எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபம் 4. அன்னமிட்டவர் வீட்டில் கன்னம் இடாதே

(19) ஒரு நூலுக்கு நூலாசிரியர் அல்லாத பிறர் வழங்கும் புகழுரை

1. முகவுரை 2. சிறப்புரை 3. அணிந்துரை 4. முன்னுரை

(20) நாய்கள் குரைத்தது என்பது

1. எண் வழு 2. இடவழு 3. பால் வழு 4. கால வழு

➢ **வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க.**

(21)பின்வருவனவற்றுள் ககரம் மாறுபட்டு ஒலிக்கும் சொல்

1. தங்கம் 2. தேகம் 3. மங்கை 4. தீங்கு

(22) பெயராகவும் வினையாகவும் அமையும் ஒரு சொல்

1. உண் 2. கல் 3. அறிவு 4. அழகு

(23)"ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும்" இங்கு இடம்பெற்றுள்ள உரிச்சொல்

1. மீன் 2. ஓட 3. ஓடுமீன் 4. உறு

(24)பின்வருவனவற்றுள் உயிரளபெடை இடம்பெற்ற தொடர்

1. கேண்மை தழீஇ கொளஎல் வேண்டும். 2. கேண்மை தழீக் கொளஎல் வேண்டும்
3. கேண்மை தழீக் கொளஎல்ல் வேண்டும் 4. கேண்மை தழீஈ கொளஎல் வேண்டும்



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(25)பின்வருவனவற்றுள் இயல்புப் புணர்ச்சியாக அமைவது

1. தமிழிலக்கியம் 2. பெண்ணழகு 3. மாம்பழம் 4. பனையோலை

(26) விபுலானந்தர் யாழ்நூலை இயற்றினார் என்பது அமைப்பு அடிப்படையில் எவ்வகை வாக்கியம்

1. கூட்டுவாக்கியம் 2. கலப்பு வாக்கியம் 3. தனி வாக்கியம் 4. தொடர் வாக்கியம்

(27) த், ப் என்பவற்றின் இன எழுத்துக்கள்

1. ங்,ஞ் 2. ந், ம் 3. ட், ப் 4. ண், ந்

(28)பின்வருவனவற்றில் பால் காட்டும் விகுதிகள்

1. கின்று, கிறு 2. கள், மார் 3. உடன், ஓடு 4. ஆன்,ஆள்

(29) செத்தான் என்பதன் பகுதி

1. செத்து 2. ஆன் 3. சா 4. செத்த

(30)வெற்றிலை என்பதைப் பிரித்து எழுதினால்

1. வெறுமை + இலை 2. வெற்றி+ இலை 3. வெறு + இலை 4. வெற்று+ இலை

➢ **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

(31) உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட பலர் தமது ………………… இழந்தனர்.

1. கட்டுப்பணத்தை 2. சலுகைப்பணத்தை 3. முற்பணத்தை 4. சந்தாப்பணத்தை

(32) சம்பவத்துடன் தொடர்புடையவராகக் கருதப்பட்ட நபரின் குடும்ப நிலையைக் கருத்திற்கொண்ட நீதிபதி அவர் வெளிநாடு செல்லமுடியாத வகையில்……….. வழங்கினார்.

1. விடுதலை 2. பிணை 3. பிடிவிறாந்து 4. ஆயுள்தண்டனை

(33) முருகன் வெளிநாட்டுக்குச் சென்று ………………….... வாழ்க்கை வாழ விரும்பவில்லை.

1. சுதேசி 2. தேசாபிமானி 3. நைட்டிகன் 4. விதேசி

(34) விசாரணையின் பின் அவன்மீது குற்றங்கள் நிரூபிக்கப்பட்டமையால்…………….. என அறிவிக்கப்பட்டான்.

1. நிரபராதி 2. குற்றவாளி 3. சந்தேகநபர் 4. கைதி

(35) பறவைகள் கூட்டம் வானிலே சிறகடித்துப் ………………………

1. பறந்தனர் 2. பறந்தது 3. பறந்தன 4. பறந்தார்

(36) இன்று, கணினிப் பாவனையாளர்கள் ……………………………

1. அதிகரித்துள்ளது 2. அதிகரித்துள்ளனர் 3. அதிகரித்தீர்கள் 4. அதிகரிப்பீர்கள்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

- **பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்க.**

வேங்கை வரிப்புலி நோய் தீர்த்த விடகாரி
ஆங்கு அதற்கு ஆகாரமானால் போல் - பாங்கு அறியா
புல் அறிவாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின் மேல் இட்ட கலம்

(37) இப்பாடலில் இடம்பெற்றுள்ள அணியாது ?

1. உருவகம் 2. தற்குறிப்பேற்றம் 3. உவமை 4. உயர்வு நவிற்சி

(38) தரப்பட்ட பாடலின் மையக்கருத்து

1. உதவி செய்யும்போது சிந்தித்துச் செய்ய வேண்டும்
2. பிறருக்கு உதவக்கூடாது
3. மண் பானையைக் கவனமாகப் பாவிக்க வேண்டும்
4. புலிக்குப் பசித்தால் மனிதனையும் கொல்லும்

(39) விடகாரி என்ற சொல்லின் பொருள்

1. நச்சு வைத்தியன் 2. மனிதன் 3. பாம்பு 4. பெண்

(40) கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும் அதற்கேற்ப பொருத்தமான வைப்புமுறையைத் தெரிவு செய்க.

அ. அவன் படுக்கையில் இருந்து எழும்பி வருகின்றவரை நான் காத்திருந்தேன்
ஆ. அவன் உறக்கத்தைக் குழப்ப நான் விரும்பவில்லை
இ. அதுவே நட்புக்கு செய்யும் மரியாதையாகும்
ஈ. இன்று காலையில் நான் அவனை இடையிடையே போய்ப்பார்த்தேன்
உ. பனையோலைப் பாயில் சுகமாகப் புரண்டு புரண்டு படுத்துக்கிடந்தான்

1. அ , ஆ ,உ,இ, ஈ 2. இ , உ, அ ,ஈ, ஆ
3. உ,ஈ, அ , இ, ஆ 4. ஈ,உ, ஆ, அ, இ

(1 X 40 = 40 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

පළමු වාර ඇගයීම
முதலாம் தவணை மதிப்பீடு - 2018
First Term Evaluation

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 10 | විෂයය / பாடம் / Subject: தமிழ்மொழியும் இலக்கியமும் | පත්‍රය / வினாத்தாள் / Paper: II | පැය / மணித்தியாலம் / Hours: 2 |

## பகுதி 11

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

**(1) சுருக்கமான விடை தருக.**

1. "கணக்காயரில்லாத வூரும் ..."
   அ) மேற்படி திரிகடுகம் பாடலின் ஆசிரியர் யார் ?
   ஆ) திரிகடுகம் என்ற பெயர் வழங்கப்படக் காரணம் யாது ?
2. "அது கிடக்க எடுத்துக்கொண்டு வா , தந்தி தபாற் கட்டுக்களை "
   இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது ?
3. நாயைப் போன்றோரது நட்பே சிறந்தது என எடுத்துரைக்கும் நூல் எது ? இந்நூல் யாரால் தொகுக்கப்பட்டது ?
4. பிரசண்ட மாருதத்திற்குப் "பிறகு" என்று சொல்லுகின்ற பிறகு அந்தச் சபையில் நிலவியது.
   அ) பிரசண்ட மாருதம் என்பதன் பொருள் யாது ?
   ஆ) பிறகு என்ற சொல்லினால் ஆசிரியர் கூறும் விடயம் யாது ?
5. பாரதியார் சுயசரிதையில் இடம்பெற்றுள்ள "விலங்கியற்கை" என்னும் தொடரின் பொருள் யாது ?
6. "நீரெடுத்து வருவதற் கவள் மணி ..." இதனைச் சந்தி பிரித்து எழுதுக.
7. பின்வரும் சொற்களைப் புணர்த்தி எழுதுக.
   1. கடல் + அலை  2. தொழில் + நுட்பம்
8. "மாணவர்களை அதிகாலையில் பாடசாலைக்கு வருமாறு" அதிபர் கூறினார். இவ்வாக்கியத்தின் ..தலைமைத் தொடரையும் சார்புத் தொடரையும் தெரிவு செய்து எழுதுக.
9. பின்வரும் வாக்கியங்களை இணைத்து ஒரே வாக்கியமாக்குக.
   அ) வேலன் பாடுவான்.
   ஆ) வேலன் ஆடுவான்.
10. "சிவனுக்கு மகன் முருகன்"
   அ) மேற்படி வாக்கியத்தில் வேற்றுமை உருபேற்ற சொல் யாது ?
   ஆ) என்ன பொருளில் வந்துள்ளது ?

(20 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(2) அ) அந்த வித்தியாசாலை மண்டபத்தில் ஒரு பக்கத்தில் ஒரு தூணுக்கு அருகிலே திண்டுத் தலையணை ஒன்றில் அடிக்கடி சாய்ந்து கொண்டும், மடியிலும் பக்கங்களிலும் அடுக்கிய தலையணைகளில் முழங்கைகளை ஊன்றி உள்ளங்கைகளினால் நெற்றிகளைத் தாங்கிக்கொண்டு கூட்ட நடைமுறைகளை அவதானித்தபடி இருக்கிறார்கள். அவர்களுக்கு தொய்வு வருத்தம். மூச்சுவிட முடியாது. பேசவியலாது. வயிற்றைக் கொய்து வாங்குகின்ற பொல்லாத வருத்தம் காச வருத்தம்.

1) வித்தியாசாலை மண்டபத்தில் நாவலர் அவர்கள் அமர்ந்திருந்த விதத்தினை விளக்குக.

2) காசநோயின் தன்மை எத்தகையது ?

ஆ) உப்பிலாக் கஞ்சியினை யுண்ணு மறுசுவை போல்
தப்பிய கந்தை பீதாம்பரம் போல் - ஒப்பும்
பனையோலைப் பாயிற் படுத்துறங்கும் வாழ்வார்
மனங்கொண்டது மாளிகை

1) இப்பாடலின் ஊடாக வெளிப்படுத்தப்படும் நீதிக்கருத்து யாது ?

2) அது எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது ?

(10 புள்ளிகள்)

(3) **பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு கட்டுரை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

1. கல்வி நமக்கு வாழ்வளிக்கிறது. அறிவை வளர்க்கும் கல்வி எம் வாழ்வை மேம்படுத்துகிறது. கற்றவனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. இதனால் எல்லாவற்றையும் விட கல்வியே மேலானது. காலத்தின் மாற்றத்திற்கு ஏற்ப கல்வியில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஆனால் மனிதன் மனிதப் பண்புடன் வாழ சமயக் கல்வியை எக்காலத்திலும் கைவிடுதல் கூடாது. இளமையிலேயே சமய விழுமியங்களுடாக வாழ்வியல் சார்ந்த விழுமியங்களைக் கற்கவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் **விளக்கக் கட்டுரை**.
2. ஏட்டிலே எழுதப்பட்ட தமிழ் மொழி அச்சு வாகனம் ஏறி நூல்வடிவம் பெற்றது. இணையத்தின் வருகையால் தமிழ் மொழி மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது. தமிழ் மொழியின் புத்தெழுச்சிக்கு வித்திட்ட பெருமை நவீன தொழிநுட்ப சாதனங்களையே சாரும் என்ற தொனிப்பொருளில் நீர் ஆற்றும் **மேடைப்பேச்சு**.
3. தற்காலத்தில் தமிழர்களது கலாசாரம் பெரிதும் மாற்றமடைந்துள்ளது. இதற்குக் காரணம் பிறநாட்டவரின் நடை, உடை, பாவனைகளை நாம் பின்பற்ற முயன்றதன் விளைவே என்று கூறும் ஒருவருக்கும் பிறநாட்டவரின் கலாசாரத்தைப் பின்பற்றுவதால் தமிழரது கலாசாரம் அழிகிறது என்று கூறும் மற்றொருவருக்குமிடையிலான **உரையாடல்.**
4. சுமந்திரன் கடவுளையோ ஆன்மீகத்தையோ ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் இல்லை. எல்லாம் நகைப்பாகத் தெரிந்தது. தான் கடவுளை வணங்காமலே நன்றாகக் கற்பதாகப் பெருமிதம் கொண்டான். ஆனால் காலம் வெகுவிரைவிலேயே அவனுக்குப் பதில் கூறக் காத்திருந்தது. இத் தன்மையைக் கொண்டமைந்த **சிறுகதை**.

(20 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(4) பின்வரும் உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 - 45** சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)

தெய்வம், குரு, அரசன் என்னும் இவர் முன் செல்வோர் அவர்களுடைய அருளை விரும்பித் தன்னால் இயன்றது ஒன்றைக் கொண்டு போய்க் கொடுத்துக் காண்பது வழக்கம். ஆகையால் கண்ணபிரான் முன் செல்லும் போது கையுறை கொண்டு போதல் வேண்டும். மிகுந்த வறுமையுள்ளோர் செல்வர் முன் போனால் மதிக்கப்படமாட்டார்கள். குற்றம் சுமத்தி அவமானம் செய்வார்கள். மானமுள்ளோர் அவ் அவமானத்தால் உயிர் விடவும் நினைப்பர். ஆகையால் செல்வர்பால் வறியோர் போவது நன்றென்று நினையாதே. வறியாரைப் பூமியில் எவரும் இகழ்வர் என்று பெரியோர் கூறுவது உண்மை. வறியாரை மனைவியும் வெறுப்பாள். தாய் தந்தையரும் வெறுப்பர். சுற்றமும் வெறுக்கும். மனிதர்களின் குணம் இது என்று சொன்னேனன்றிப் பரம்பொருளும் வேதத் தலைவருமாகிய கண்ணபிரான்பாற் போவது தகுதி அன்று என்று மறுக்கவில்லை. கண்ணபிரான்பால் கையுறையில்லாமற் யான் எப்படிப்போவேன்? கடவுளுக்கு யான் மலைத்துணையாக கொடுக்கவேண்டியதில்லை. இப்படிச்சொல்லிய நாயகனுடைய வார்த்தையைக் கேட்டு மகிழ்ந்து சுசீலையானவள் , அன்று முதல் தான் உண்ணாமல் இருந்துகொண்டு நாயகன் அரிதாகத் தேடித்தரும் தானியத்தில் தனக்குரிய பங்கைச் சேர்த்துப் பின் போதிய தானியம் சேர்ந்தவுடன் இவற்றை எடுத்து நீரில் நனையவைத்து வறுத்துக்குற்றி அவலாக்கி முனிவருடைய கந்தைத் துணி ஒன்றில் முடிந்து முனிவர் முன்னிலையில் கொண்டுபோய் வைத்து வணங்கி, என்னருமை நாயகரே! இனிக் கண்ணபிரான்பாற் போய் வருக என்றாள். முனிவரும் வழி விசாரித்துக் கண்ணபிரான்பாற் சென்றார்.

(10 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk